இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 113 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 17 – புதன்கிழமை 03 டிசம்பர் 2025 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 113 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 17 - Wednesday 03 December 2025 - Chennai 12 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2025) திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களின் 93வது பிறந்தநாளையொட்டி, அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என். நேரு, மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி மற்றும் மரு. நா.எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

## ‘தினத்தந்தி’ நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர்.சுகுமாருக்கு

# 2024-ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல்’ விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, டிச. 3 - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை 50 ஆண்டுகளாக இதழியல் துறையில் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர்.சுகுமார் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றத்தில் 2021-22 ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மானியக் கோரிக்கையின்போது, இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்பு நிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றி வரும் சிறந்த இதழியலாளர் ஒருவருக்கு ஆண்டுதோறும் ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மற்றும் ரூ.5 இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், கடந்த 2021 ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மூத்த பத்திரிக்கையாளர் ஐ.சண்முகநாதன் அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’ மூத்த பத்திரிக்கையாளர் வி.என்.சாமி அவர்களுக்கும் 2023ஆம் ஆண்டிற்கான ‘கலைஞர் எழுதுகோல் விருது’ நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்களுக்கும், அதே ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, சிறப்பினமாக மகளிர் ஒருவருக்கும் ‘கலைஞர் எழுதுகோல் விருது’ வழங்கப்படும் என்ற முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து திருமதி.சுகிதா சாரங்கராஜ் அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

அவற்றின் தொடர்ச்சியாக, 50 ஆண்டுகளாக இதழியல் துறையில் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர். சுகுமார் அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதிற்கு தமிழ்நாடு அரசால் தேர்வு செய்யப்பட்டார்.

### சுவையான செய்திகளை வழங்கியவர்!

டி.இ.ஆர்.சுகுமார் அவர்கள் இந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், தமிழ்நாட்டின் முதலமைச்சர்களாகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., உள்ளிட்ட எண்ணற்ற அரசியல் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்து நேர்முகமாகப் பேட்டிகண்டு சுவையான செய்திகளை மக்களுக்கு வழங்கியவர் ஆவார். ‘தினத்தந்தி’ நாளிதழில் நாள்தோறும் அவர் எழுதி வரும் “தலையங்கம்”, வாரம் ஒருமுறை “பேனா மன்னன்” என்ற பெயரில் வாசகர்களின் கேள்விகளுக்கு அவர் அளித்துவரும் பதில்களும் மக்களிடம் பெரிதும் வரவேற்பு பெற்றுள்ளவை என்பது குறிப்பிடத்தக்கது.

### முத்தமிழறிஞர் கலைஞருடன் 40 ஆண்டுகளுக்கு மேல் தொடர்பு கொண்டவர்!

மேலும், டி.இ.ஆர்.சுகுமார் அவர்கள், உலக அளவில் சீனா, சிங்கப்பூர், ஹாங்காங், துபாய், மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு சிறப்பான நிகழ்வுகளின்போது, அந்தந்த நாடுகளுக்குச் சென்று, செய்திகளைத் திரட்டி, தினத்தந்தி



வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள சிறப்பான இதழியல் துறை அனுபவங்களையும் கொண்டுள்ளார். அத்துடன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் 40 ஆண்டுகளுக்கு மேல் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

இதழியல் துறையில் 50 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடனும் நேர்த்தியுடனும் நேர்மையுடனும் நெஞ்சுறுதியோடும் தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றிவரும் டி.இ.ஆர். சுகுமார் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் 2024ஆம் ஆண்டுக்கான கலைஞர் எழுதுகோல் விருது, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் பொற்கிழி ஆகியவற்றை வழங்கிச் சிறப்பித்தார்.

நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.12.2025) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் 2024ஆம் ஆண்டிற்கான கலைஞர் எழுதுகோல் விருதினை 50 ஆண்டுகளாக இதழியல் துறையில் பணியாற்றி நிறைந்த அனுபவம் பெற்றுள்ள தினத்தந்தி நாளிதழின் நிர்வாக ஆசிரியர் டி.இ.ஆர்.சுகுமார் அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி வெ.ஷோபனா, செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






உலக மாற்றுத்திறனாளிகள் தினம்-2025

உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு

அதிகாரமளித்தல்

அறிமுக விழா

‘எல்லாருக்கும் எல்லாம்’ என்னும் திராவிட மாடல் சமூக நீதியின் ஒரு முக்கியப் பகுதிதான் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகளை உறுதி செய்வதாகும்.
– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



இவ்விழாவில்,
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும்
சீர்மிகு பெருமக்கள் பங்கேற்கின்றனர்.

நாள் : 3.12.2025, புதன்கிழமை
நேரம் : காலை 10.45 மணி,
இடம் : வள்ளுவர் கோட்டம், சென்னை

செ.ம.தொ.இ/1423/வரைகலை/2025

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009
tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

எல்லார்க்கும் எல்லாம்!